முற்பகல் 10-30

3. தகவல் கோரல்

(அ) மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் சாம்பலைத் தனியார் சிமெண்ட் ஆலைகளுக்குக் குறைந்த விலையில் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினமணியில் வந்துள்ள ஒரு செய்தியைத் தங்களிடத்தில் காட்டி அனுமதி கோரியிருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு தந்திருக்கிறேன். தமிழக அரசின் சார்பாக இறக்குமதி செய்யப்படுகின்ற நிலக்கரியை மேட்டூர், தூத்துக்குடி, எண்ணூர், வட சென்னை போன்ற மின் நிலையங்களில் பயன்படுத்திவிட்டு அதிலிருந்து வெளியேறுகிற ash என்பதைக் குறைந்த விலைக்கு குறிப்பிட்ட இரண்டு தனியார் சிமென்ட் ஆலைகளுக்கு மட்டும் வழங்குவதால் ஆண்டொன்றுக்கு 450 கோடி ரூபாயிலிருந்து 500 கோடி ரூபாய் வரை அரசுக்கு நஷ்டம் ஏற்படுவதாக செய்திக் கட்டுரை வந்திருக்கின்றது. இந்த விலையை உயர்த்தி அரசுக்கு வருமானம் வருகின்ற வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (குறுக்கீடு)*

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற நளினி சிறையில் செல்ஃபோனைப் பயன்படுத்தியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய இணையற்ற தலைவன் ராஜீவ் காந்தி அவர்களைப் படுகொலை செய்த வழக்கில் தண்டனை அளிக்கப்பட்ட குற்றவாளி நளினி என்பவர், வேலூர் மத்திய பெண்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் சில மாதங்களுக்கு முன்னால் சென்னை உயர் நீதிமன்றத்தில்கூட*

2010 ஏப்ரல் 21] [திரு. சி. ஞானசேகரன்]

வழக்குத் தொடுத்து முன்கூட்டியே தன்னை விடுதலை செய்ய வேண்டுமென்றெல்லாம் மனு செய்து, அந்த மனுவில் தான் சிறைத் துறையினுடைய விதிகளை எந்தக் காலக்கட்டத்திலும் மீறவில்லை என்றெல்லாம் சத்தியப் பிரமாண வாக்குமூலமெல்லாம் போட்டு முன்கூட்டியே என்னை விடுதலை செய்ய வேண்டுமென்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். ஆனால், நேற்று அதிகாலை 6-30 மணியளவில் வேலூர் பெண்கள் மத்திய சிறையிலே சோதனையிட்டபோது, ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் குற்றவாளியாக இருக்கின்ற நளினி என்பவர், Airtel நிறுவனத்தின், சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு எண்ணை, சென்னையிலிருந்து பெற்று, ஒரு cell phone-ஐத் தன்னுடைய பையில் வைத்திருந்ததாக்ச் சோதனையில் கண்டறிந்திருக்கிறார்கள். அந்தச் சோதனையின்போது cell phone-ஐ அவர்கள் கழிவறையிலே போட்டுவிட்டதாகவும். பிறகு அறையில் சென்று சோதனை செய்தபோது, அங்கே இரண்டு sim card-கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிகிறது. அதைச் சோதித்துப் பார்த்ததில் கடந்த 4 ஆண்டுகளாக இலண்டனுக்கும், கனடாவுக்கும் பல முறை அந்தக் குற்றவாளி பேசியிருப்பதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். இப்போது, எந்தவிதமான சிறை விதிகளையும் தான் மீறவில்லை என்று கூறி, அவர்கள் ஒரு சலுகை பெற்று 'A' Class-ல் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஒரு முக்கிய நபரை, இந்தியாவினுடைய முன்னாள் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களைக் கொலை செய்த வழக்கில் குற்றவாளியாக இருக்கிறவர் கைக்கு எப்படி Mobile Phone போனது? அவர் கடந்த ஏப்ரல் 6 ஆம் தேதிகூட சிறைத் துறை அதிகாரிகளுக்கும், அரசுக்கும் அனுப்பிய மனுவில், அவர்கள் ஏற்கெனவே தான் எந்தவிதமான சிறை விதிகளையும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக உரையை முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: இதோ முடித்துவிட்டேன். எந்தவிதமான விதிகளையும் தான் மீறவில்லை; சிறைத் துறை அதிகாரிகளுக்குத் தான் இலஞ்சம் கொடுப்பதில்லை; ஆகவே, தன்னை, சிறைத் துறை அதிகாரிகள் கொடுமைப்படுத்துகிறார்கள்; தன்னை torture செய்கிறார்கள் என்றெல்லாம் மனு செய்திருக்கிறார்கள். ஆனால், எந்தவிதமான bribe-ம் கொடுக்காமல், எதுவும் இல்லையென்று சொன்னால், எப்படி அவர் கைக்கு cell phone வந்தது என்பதையும், எப்படி 2 sim card-களைப் பெற்று 4 ஆண்டுகளாக இலண்டனுக்கும், கனடாவுக்கும் அவர்கள்

[திரு. சி. ஞானசேகரன்] [2010 ஏப்ரல் 21

தொலைபேசியிலே பேசினார்கள் என்பதையும் கண்டறிந்து அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

அதேபோல, நான் பொது விவாதத்திலே பங்கேற்றுப் பேசியபோதுகூட சொன்னேன். சிறையிலே இப்படிப்பட்ட விதிமீறல்கள் நடைபெறுகின்றன. cell phone வைத்திருந்ததாகத் திருச்சியிலேகூட கண்டுபிடித்திருக்கிறார்கள். பல வகைகளிலும் சிறைகளில் இவ்வாறு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இவரை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டுமென்ற வழக்கிலேகூட மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டி, அரசைப் பாராட்டி, உயர் நீதிமன்றமே அவர்களுக்குச் சரியான முடிவை அரசு எடுத்திருக்கிறது என்பதைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு போட்ட கமிட்டியிலேகூட எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராஜேந்திரன் அவர்களும், மாவட்ட நீதிபதி திரு. கலையரசன் அவர்களும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரமெல்லாம் பேச முடியாது நீங்கள். (குறுக்கீடு) முடியுங்கள் என்று சொல்கிறேன். திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்தால், எப்படி? (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும்.

முற்பகல் *10-35*

திரு. சி. ஞானசேகரன்: முடித்து விட்டேன். முடித்து விட்டேன். (குறுக்கீடு) ஏற்கெனவே தூக்குத் தண்டனை பெற்றவர், எங்களுடைய அருமை அன்னை சோனியா காந்தி அவர்கள், பரிந்துரை செய்த காரணத்தினாலே அதை ஆயுள் தண்டனையாக மாற்றிக் கொண்டிருக்கிறவர், முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்றெல்லாம் நீதிமன்றத்தைப் பலமுறை அணுகி, அரசின்மீது பல பழிகளைப் போட்டு, அடிக்கடி கடிதங்கள் எழுதுகிற நளினி இப்பொழுது சிறை விதிகளை எல்லாம் மீறி செல்ஃபோனை வைத்துக்கொண்டு இலண்டனுக்கும் அதேபோல கனடாவுக்கும் பலமுறை பேசியிருக்கிறாரே, அது எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தீர்களென்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

2010 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை முறை சொன்னாலும் இலண்டன் ஒன்றுதான், உட்காருங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் நளினி செல்ஃபோன் வைத்திருந்தது குறித்து பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இதுகுறித்து ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நளினி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்கான கோரிக்கையை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதனை திரு. ஞானசேகரன் raise பண்ணிவிட்டார். அதற்கு அமைச்சர் பதில் சொன்ன பிறகு மற்றவற்றை எடுக்கலாம். உட்காருங்கள் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) யாரும் notice கொடுக்கவில்லை. அவர் புதிதாக ஒரு subject-ஐ open பண்ணி சொல்லியிருக்கிறார். என்னவென்று அமைச்சர் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் notice எதுவும் கொடுக்கவில்லையே! ஒவ்வொருவரும் அதையே சொல்லிக் கொண்டிருந்தீர்கள் என்றால் நேரமாகிறது. (குறுக்கீடு) அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அவர் raise பண்ணினார், நீங்கள் notice எதுவும் கொடுக்கவில்லையே! திரு. சிவபுண்ணியம், நீங்கள் notice எதுவும் கொடுக்காமல் எப்படி raise பண்ணுகிறீர்கள்? மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசிய பிரச்சினையின்மீது, அரசின் சார்பில் வந்திருக்கிற தகவலை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 20-4-2010 அன்று காலை 6½ மணியளவில் வேலூர் மத்திய பெண்கள் சிறையினுடைய Superintendent அவர்களும், அவரோடு அதிகாரிகளும், வழக்கமாகச் செய்கின்ற check-up-க்காகப் போய் பார்த்திருக்கிறார்கள். நளினி அவர்கள் இருந்த அறையை, அவர்கள் சோதனையிட்டபொழுது துணிப் பையில் ஒரு செல்ஃபோன் மறைத்து வைத்திருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை அதிகாரிகள் எடுக்க முற்பட்டபொழுது, அவர் வேகமாக, அதிகாரி கையில் இருந்து பிடுங்கி பக்கத்தில் இருந்த கழிவறையில் போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

[2010 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், நீங்கள் எல்லாம் எனக்குச் சொல்லித் தரவேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லித் தரவேண்டாம், எனக்குத் தெரியும். எல்லாம் தெரியும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன் அல்லவா? அந்த subject சம்பந்தமாக அவர்தான் முதலில் raise பண்ணினார். நீங்களும் அதே subject-ஐ open பண்ணுவதாக இருந்தால், முன்பே நீங்கள் எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) என் அனுமதி இல்லாமல் எழுப்ப முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, zero hour-இல் யார் உங்களிடம் அனுமதி பெற்றார்களோ அவர்கள்தான் எழுப்பலாம். அதையொட்டி எல்லோரும் பேசமுடியாது. ஆகையினாலே என்னுடைய கருத்தை நான் சொல்லிவிடுகிறேன். உடனே Deputy Jailor ஓடிப் போய் கழிவறையிலே வீசப்பட்ட அந்த செல்ஃபோனை எடுத்து மீட்டிருக்கிறார்கள். அது தண்ணீரில் நனைந்திருக்கிறதா அல்லது அது வேலை செய்கிறதா என்று பார்ப்பதற்கு அதைப் பழுதுபார்க்கும் நிறுவனத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், நான்கு ஆண்டுக்காலமாக அதில் பேசியிருக்கிறார்கள் என்று சொன்னார். அப்படிப்பட்ட தகவல் இன்னும் வரவில்லை. அப்படி இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். அந்த செல்ஃபோனை analyse செய்து பார்த்தால்தான், அந்த sim card-இல் இருந்து யார் யாரோடு பேசியிருக்கிறார்கள் என்று தெரியவரும். தெரிந்தால், நாங்கள் அதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முற்பகல் 10-40

அந்த செல்ஃபோன் மட்டுமின்றி இரண்டு sim card-களும் கிடைத்திருக்கின்றன. அதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இரண்டாவதாக, அவர் சொன்னதைப்போல, இதுவரையில் பல சிறைச்சாலைகளில் செல்ஃபோன்களும், sim card-களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், வேலூர் பெண்கள் மத்திய சிறையில் இதுவரையில்

2010 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

அப்படிப்பட்ட புகார்கள் வந்ததுமில்லை; செல்ஃபோனோ, sim card-ஓ கைப்பற்றப்பட்டதுமில்லை. இதுதான் முதன்முறை. இதுவரையில் மற்ற சிறைச்சாலைகளிலெல்லாம் இப்படிச் செய்திருக்கிறார்களே, அவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அவர் கேட்டார். இந்த ஆட்சியில் 1-1-2006 முதல் 10-3-2010 வரையில் செல்ஃபோன்கள், கஞ்சா, இதுபோன்றவை கடத்தியதற்காக அரசாங்கம் அதையெல்லாம் தீவிரமாக check-up செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறது. செல்ஃபோன் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக செல்ஃபோன் கண்டறியும் கருவி ஒன்று, கஞ்சா போன்ற பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகப் பன்முக உலோகம் கண்டறியும் கருவி, இவற்றைக் கொடுத்திருக்கிறோம். இவற்றின்மூலமாக 19 சிறைப் பணியாளர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 5 பணியாளர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 195 சிறைவாசிகளுக்குச் சிறைத் தண்டனையே தந்திருக்கிறோம். 60 சிறைவாசிகள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 7 வெளி நபர்கள்மீதும் இத்தகைய கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவுதான் அக்கறை காட்டி, இப்படிப்பட்ட பொருட்கள் உள்ளே போகாமல் தடுப்பதற்கு, அரசாங்கம் எத்தனையோ திட்டங்கள் சட்டங்கள் போட்டுச் செய்தாலும், திட்டம் போட்டு, அவற்றை மீறுகின்ற கூட்டம் ஒன்று செய்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே, செல்ஃபோனோ, sim card-ஓ இத்தகைய பொருட்கள் உள்ளே போகாமல் இருப்பதற்கு அரசாங்கம் மிகுந்த கவனத்தோடு பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற அறிவுரையை அடிக்கடி சிறை அதிகாரிகளுக்குத் தந்துகொண்டிருக்கிறது.

(ஆ) மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் சாம்பலைத் தனியார் சிமென்ட் ஆலைகளுக்குக் குறைந்த விலையில் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நட்டம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 219-ன்கீழ் (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, சொல்லுங்கள். வேறு சப்ஜெக்டா? அல்லது இதுபற்றித்தானா? (குறுக்கீடு) நீங்கள் காலையிலேயே என் அறைக்கு வந்தீர்கள் இல்லையா? என்ன விஷயம் என்று என்னிடம்

சொல்லியிருக்கலாம் அல்லவா? (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியின் சார்பாக அவர் கேட்டார், முன் அனுமதி பெற்று அவர் இங்கே பேசினார். நீங்கள் எதுவுமே சொல்லவில்லை. (குறுக்கீடு) சரி, என்ன விஷயம் என்று சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் ஆயிரக்கணக்கான டன்கள் நிலக்கரிச் சாம்பல், சிமெண்ட் ஆலைகளுக்குச் சலுகை விலையில் வழங்கப்படுவதால் மின் வாரியத்திற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை ஏற்கெனவே கவனத்திற்குக் கொண்டு வந்தாயிற்று. காலையிலேயே திரு. வேல்முருகன் அவர்கள் என்னிடத்தில் சொன்னார். நீங்கள் அவையிலே எழுப்புங்கள் என்று சொல்லியிருந்தேன். அவர் எழுப்பிவிட்டார். அதையேதான் நீங்களும் கேட்கிறீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்வார். உட்காருங்கள். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: எந்த உறுப்பினரும் அரசாங்கம் சம்பந்தப்பட்ட ஒன்றை இந்த அவையில் கிளப்புவதற்கு முன்னால், குறிப்பிட்ட அந்த அமைச்சருக்கோ, முதலமைச்சருக்கோ தெரிவித்தால்தான் அதற்கு reply-யோடு நாங்கள் வரமுடியும். நாங்கள் உள்ளே 9-25 மணிக்கு நுழையும்போது இதை எடுத்துக்கொள்ளலாமா, அதை எடுத்துக்கொள்ளலாமா என்றால், நீங்கள் பத்திரிகைச் செய்தியைப் படித்துவிட்டுப் பேசுகிறீர்கள். அதற்கு வேண்டிய பதிலை ஆதாரப்பூர்வமாக சர்க்கார் தரப்பில் தரவேண்டும். அதற்கு அவகாசம் இல்லை. ஆனால், பத்திரிகையிலே என்ன செய்தி வரும்? 'சாம்பலை எடுத்துக்கொண்டு போனார்கள் என்று அரசாங்கத்தின்மீது திரு. வேல்முருகன் குற்றச்சாட்டு' என்று செய்தி வரும். அரசாங்கம் பேசாமல் இருந்தது மாதிரி இருக்கும். நியாயமாகப் பார்த்தீர்கள் என்றால், அவர் பேசியதை எல்லாம் நிறுத்தி வைத்துவிட்டு, நாங்கள் நாளைக்கு பதில் சொன்ன பிறகுதான், அவர் பேசியதை publish செய்ய வேண்டும். இல்லையென்றால் அரசாங்கம் தரப்பிலே பேசாமல் இருந்தோம் என்று வந்துவிடும்.